# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் — வணிக மாத இதழ்

Volume: 12 | Issue : 12 | MARCH 2024 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE

சிங்கப்பூர்-மலேசியா

6 நாட்கள்

Trichy to Trichy

01-03-2024

All Inclusive Rs.92,500* per person

BOOK NOW 97 87 066 066

VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

82/235, காமராஜர் சாலை, மதுரை




**Memorandum of Understaning (MoU)**
**KLN College of Engineering and Sourashtra Chamber of Commerce**

அவோ! மிளோ!! ஹொடோ!!!

**SITCON**

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE 2024

ஹ்டினிம், பிசினிம், ஹோரங்கும்

**சிட்கான் 2024**

– கே.கே. தினேஷ், சேர்மன், சிட்கான் 2024

To

SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை–1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

## மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343



---

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349




---



Prop.: B.S. Rajan

- CCTV Camera
- Long Distance Monitor
- Security Alarm
- Digital Video Recorder
- Voice Records
- Access Control System
- Firm Alarm
- Audio & Video Door Phones

*Safety! Security!! Surweillance!!!*

## A TO Z
**CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

---

## உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

**L.N.R. தாமோதரன் - 98431 71477**



# தலைவர் அறிக்கை

அல்கிதெ ஙோ மொன்னு பொறெ

**நமஸ்கார்...**

T.R.மோகன்ராம்
தலைவர்

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாடு - சிட்கான், நடைபெறும் 2024ம் ஆண்டில் நடத்துவதற்கான பேச்சுவார்த்தை கடந்த மாதம் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அதற்கு, முதல் பணியாக சேர்மன் தேர்வு நடைபெற்றது.

சேம்பர் துணைத் தலைவராக இருப்பவர்களே சிட்கான் மாநாட்டின் சேர்மன்-ஆக தேர்வு செய்வது வழக்கம். அதன்படி, சேம்பர் துணைத் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரின் ஒப்புதலுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்தக்கொள்கிறேன்.

அங்கத்தினர்கள் அனைவரும் நமது சிட்கான் 2024 தொழில் வர்த்தக மாநாட்டிற்கு என்றும்போல் பெருமளவு ஆதரவு தந்து வெற்றிபெறச் செய்திட கேட்டுக்கொள்கிறேன்.

2022ல் சேம்பர்-ன் நடப்பு நிர்வாகம் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு புதிய முயற்சிகளை நமது சேம்பர் அங்கத்தினர்களின் நலனுக்காக மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, கே.எல்.என். பொறியியற் கல்லூரி மற்றும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இணைந்து ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால், மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் பரஸ்பரம் ஆராய்ச்சி, திறன், முதலீடு போன்றவற்றை பெற முடியும். இது, மாணவர்களுக்கும், தொழிலுக்கும் ஏற்றத்தைத் தரும் என்ற நோக்கில் நமது குழுவினர் இந்த முயற்சிக்கு வித்திட்டுள்ளனர்.

இந்த முயற்சிக்கு துணைத் தலைவர் திரு. K.K. தினேஷ், செயற்குழு உறுப்பினர்கள் திரு. S.S. ராம்சுந்தர் மற்றும் திரு. T.N. சூரியபிரகாஷ் ஆகியோர் முக்கியப் பங்காற்றியுள்ளனர். அவர்களை நமத ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பாராட்டுகிறது.

வரும் ஏப்ரல் மாதம் முதல் 2024-2025 புதிய நிதி ஆண்டு துவங்க இருக்கிறது. அரசின் வழிகாட்டுதலின்படி, சட்டதிட்டங்களுக்குட்பட்டு, நிதி சார்ந்த நடவடிக்கைகளில் என்றும்போல் தொடர்ந்து கண்ணியத்துடன் செயல்பட்டு, சமூகத்தில் நற்பேரு பெற்று, தொழிலில் வெற்றி பெற அங்கத்தினர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |
| **EC Members** | **Team-Chairmen** | **Contact** |
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. சுபேந்திரன்

**18.02.2024** – 16வது செயற்குழு கூட்டம் காலை 11 மணி அளவில் ஈஸ்வரி மஹாலில் நடைபெற்றது. முக்கியமான இந்த கூட்டத்தில் சிட்கான் 2024 சேர்மன் தேர்வு நடைபெற்றது. சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**01.03.2024** – சிட்கான் 2024 முதல் ஆயத்த கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், சிட்கான் 2024 பணிகளை மேற்கொள்ள சிறப்புக் குழுக்களும், அதற்கான ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வும் செய்யப்பட்டது. கூட்டத்திற்கு சேர்மன் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார்.

**05.03.2024** – மார்ச் 8, மகளிர் தினத்தை முன்னிட்டு, மகளிர்க்கான சிறப்பு மாதாந்திர கூட்டம் நடத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினர்களாக சீதா லட்சுமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி தாளாளர் திருமதி. பூர்ணிமா வெங்கடேசன், பல் மருத்துவ நிபுனர் மரு. காயத்திரி ராஜகோபால் மற்றும் டர்னிங் பாயின்ட் நிறுவன நிர்வாக இயக்குநர் திருமதி. சூரிய பிரீதி ஆகியோர் கலந்து கொண்டு வெவ்வேறு தலைப்புகளில் பேசினர். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக் குழு சேர்மன் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் ஏற்பாடு செய்தார். கூட்டத்தில் மகளிர் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**07.03.2024** – கே.எல்.என். பொறியியற் கல்லூரி மற்றும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தொழில்முறை புரிந்துணர்வு ஒப்புந்தம் செய்யப்பட்டது. கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சேம்பர் சார்பாக தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்களும், கல்லூரி கவுன்சில் சார்பாக தலைவர் திரு. K.N.K. கார்த்தக் அவர்களும் கையொப்பமிட்டனர்.

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அங்கத்தினர்கள் அனைவருக்கும் 2024-25 புதிய நிதி ஆண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவரின் தொழிலும், வாழ்வும் மேம்பட்டு நாட்டுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் நம் செயல்பாடுகள் நல்லதொரு முன்னுதாரணமாய் திகழ்ந்திட வாழ்த்துகிறேன்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 08.03.2024 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2022ம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை மூத்த பத்திரிக்கையாளர் திரு. வி.என். சாமி அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

திரு. வி.என். சாமி அவர்கள் நம் ஸௌராஷ்ட்ர சமூகத்தைச் சேர்ந்தவர். தினமணி நாளிதழில் பணியாற்றியவர். பல்வேறு ஆராய்ச்சி நூல்களை எழுதியவர். தமிழகத்தின் உயரிய விருதான தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது பெற்றவர்.

இவரது பெருமைகளை நம் சமூக மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நமது லாப் ஸமாச்சார் 2021 செப்டம்பர் நாளிதழில் இவரது பேட்டி வெளியானது குறிப்பிடத்தக்கது. அதில் அவர் பல்வேறு முக்கியத் தகவல்களைப் பகிர்ந்துள்ளார். முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்களை பேட்டி கண்டவர். அதே போல, முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர். எம்.ஜி.ஆர்., அவர்கள் அரசியலில் வருவதற்கு இவரின் பங்களிப்பு குறித்தும் அழகாகக் கூறினார்.

இப்பேருபெற்ற பெருமைகளைக் கொண்ட இவர் நம் சமூகத்தவர் என்பதில் பெருமைகொள்ள வேண்டும். பல்வேறு ஆராய்ச்சி நூல்களை எழுதிய இவருக்கு இந்த கலைஞர் எழுது கோல் விருது வரவேற்கத்தக்கது. நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இவரது சேவையை போற்றுகிறது. லாப் ஸமாச்சார் இதழ் குழு இந்த தகவலை வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.



*Best Compliments from*

# BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

BVK GROUP

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.




# கே.எல்.என். பொறியியற் கல்லூரி மற்றும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**சேம்பர் முயற்சி :** நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் துவங்கிய சமயம், தொழில் முனைவோர்களின் நலனுக்காக மாதாந்திர கூட்டம் நடத்தப்பட்டது. பின்னர் லாப் ஸமாச்சார் இதழை வெளியிட்டது. தொடர்ந்து தொழில் வர்த்தக கருத்தரங்கு, வர்த்தக கண்காட்சி போன்றவைகளை நடத்தி வந்தது. இதனை விரிவுபடுத்த, வேலை வாய்ப்பு முகாம், புற நகர் பகுதிகளில் வர்த்தக கூட்டம் போன்றவைகளையும் ஏற்பாடு செய்தது.

தற்போது அடுத்த ஒரு முயற்சியாக, கே.எல்.என். பொறியியல் கல்லூரியுடன் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

**கடந்து வந்த பாதை :** கடந்தாண்டு 2023ல் நமது சேம்பர்–ல் நடைபெற்ற மாதாந்திர கூட்டத்தில், சிறப்பு விருந்தினராக இக்கல்லூரியிலிருந்து கலந்து கொண்ட பேராசிரியர் திரு. பார்த்த சாரதி அவர்கள் கல்லூரி மற்றும் மாணவர்களின் திறன் குறித்து பேசியபோது துவங்கியது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தப் பயணம். தொடர்ந்து, சென்ற ஆகஸ்ட்–ல் மூன்று நாட்கள் நடைபெற்ற.SCC Trade Fair 2023- ல் கல்லூரி மாணவர்கள் தங்களின் தனித்திறமையால் உறுவான தயாரிப்புகள் இடம்பெறச் செய்யப்பட்டது. இது, பார்வையாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்களைக் கவர்ந்தது. இதனைத் தொடர்ந்து, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றது. அதன்படி, இந்த மாதம் மார்ச் 7ம் தேதி அன்று கே.எல்.என். பொறியியற் கல்லூரியுடன் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது.

**ஒப்பந்தத்தின் பயன்கள் : தொழில் முனைவோர்களுக்கு –** நமது சேம்பர் உறுப்பினர்கள், தொழில் முனைவோர்கள், தங்கள் தொழிலுக்குத் தேவையான திறன்களைப் பெற முடியும். மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு, புதிய சிந்தனைகள் மற்றும் யுக்திகளை உங்கள் நிறுவனத்தின் மூலம் வெளி உலகிற்கு எடுத்துச் செல்லமுடியும் அல்லது அவரது புதிய முயற்சிக்கு முதலீடு செய்யலாம். வேலைக்கு உகந்த ஆட்களை தேர்வு செய்யலாம். கல்லூரியின் வசதிகளை தங்களது தொழில் மேம்பாட்டிற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். சந்தை நிலவரம் குறித்த ஆய்வறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிக் கொள்ளலாம். உறுப்பினர்கள் தாங்கள் தொழில் சம்பந்தமாக மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடலாம். இது போன்ற காரணங்களால் தங்களின் தொழிலை அடுத்த  கட்டத்திற்கு கொண்டு செல்லலாம்.

**மாணவர்களுக்கு –** வேலைவாய்ப்புகளைப் பெறுதல், இண்டஸ்டிரியல் விசிட் மூலம் தொழில் நடைமுறைகள், உற்பத்தி குறித்த அறிவைப் பெறுதல், ஆராய்ச்சி மேற்கொள்ளுதல், ப்ராஜக்ட் தயாரித்தல், அவர்களின் புதிய கண்டுபிடிப்புக்கு காப்புரிமை பெறச் செய்தல், முதலீடுகளை பெறுதல், தொழில்முனைவோராக வருவதற்கு ஊக்குவித்தல்.

**கூட்டம் :** இதற்காக நடைபெற்ற கூட்டத்தில், நமது சேம்பர் சார்பில் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்களும், கல்லூரியின் சார்பில் கௌன்சில் தலைவர் திரு. K.N.K. கார்த்திக் அவர்களும் கையெழுத்திட்டார்கள். கூட்டத்தில், இந்தோனேசிய தொழிலதிபர் சேம்பர் போஷக உறுப்பினர் திரு. M.K. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பங்கேற்றார்.

**பாராட்டுகள் :**இந்த முயற்சிக்கு துணைத் தலைவர் திரு. K.K. தினேஷ், செயற்குழு உறுப்பினர்கள் திரு. S.S. ராம்சுந்தர் மற்றும் திரு. T.N. சூரியபிரகாஷ் ஆகியோர் முக்கியப் பங்காற்றியுள்ளனர். அவர்களை நமத ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பாராட்டுகிறது.




ADISHTU
TRUSTABLE SNACKS PARTNER



STARTUP INDIA
ENERGY BAR




fssai
12423012002062

Ministry of Micro, Small and Medium Enterprises
Government of India
MSME
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES
सूक्ष्म, लघु एवं मध्यम उद्यम

- NO ADDED SUGAR
- NO ADDED PRESERVATIVES
- NO ADDED CHEMICALS
- NO ARTIFICIAL SWEETNESS
- NO ARTIFICIAL FLAVORS
- NO DAIRY, SOY, GLUTEN

MADE IN INDIA

adishtu
WWW.ADISHTU.COM



திருமதி. பூர்ணிமா வெங்கடேஷ்



Dr. காயத்ரி ராஜகோபால்



திருமதி. T.R. சூரிய பிரீத்தி




மார்ச் 8, உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்ன்-ன் மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டம், மகளிர்க்கான சிறப்புக் கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

05.03.2024 அன்று மாலை 6 மணியளவில் சேம்பர் வளாகத்தில் இந்த கூட்டம் சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சேம்பர் நிகழ்ச்சிக் குழு சேர்மன் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

மகளிர் பலர் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில், வெவ்வேறு துறைகளில் சாதனை புரிந்து வரும் மூன்று மகளிர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு தங்கள் உற்சாகப் பேச்சால் அனைவரையும் கவர்ந்தனர்.

Secret to Success என்கிற தலைப்பில், திருமதி. பூர்ணிமா வெங்கடேஷ் Correspondent, Sitalakshmi Girls Hr. Sec. School, Madurai. அவர்கள், இன்றைய பெண்கள் குடும்பம் தான் உலகம் என்று நினைத்து மூளையில் ஒடுங்கி விடக்கூடாது, வெளி உலகின் சுவாரஸ்யங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று பேசினார்.

How women can Choose என்கிற தலைப்பில் Dr. காயத்ரி ராஜகோபால் Dental Specialist அவர்கள், பெண்கள் தங்களுக்கான துறைகளை எவ்வாறு தேர்வு செய்வது என்பது பற்றி தங்கள் அனுபவத்தின் மூலம் அழகாக கூறினார்.

Handling Customers என்கிற தலைப்பில் திருமதி. T.R. சூரிய பிரீத்தி MD., Turning Point & Jonathan Lending Library அவர்கள் தொழில்துறையில் உள்ள பெண்கள், தங்கள் வாடிக்கையாளர்களை எவ்வாறு அணுக வேண்டும் என்று கதைகளைக் கூறிப் பேசினார். ஒரு கடையில், விலை குறைந்த பொருளை வாங்கும் வாடிக்கையாளரைக்கூட நன்கு வரவேற்பது, பன்முகத்தன்மை கொண்ட வாடிக்கையாளர்களிடத்தில் கனிவுடன் செயல்படுவது போன்றவை மக்களிடத்தில் நன்மதிப்பை ஏற்படுத்தும் என்று அழகாக விளக்கினார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட மகளிர் பலர் தங்கள் அனுபவக் கருத்தைப் பகிர்ந்துகொண்டனர். சிறப்பு விருந்தனர்களாக கலந்துகொண்ட மூவருக்கும் சேம்பர் சார்பாக பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசு வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.




# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் விழிப்புணர்வு தகவல்

மக்களவைத் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது. வரும் மக்களவைத் தேர்தலில் 543 உறுப்பினர்களை நாம் தேர்ந்தெடுக்கப் போகிறோம். இன்னும் 23 ஆண்டுகளில் நமது சுதந்திரத்தின் நூற்றாண்டைக் கொண்டாடப் போகிறோம்.

நமது முதல் பொதுத் தேர்தல் 1952-ல் நடந்தது. அன்றைய 36 கோடி இந்திய மக்களில், 17 கோடி பேர் வாக்காளர்களாக இருந்தனர். அவர்களில் 45% (சுமார் 8 கோடி பேர்) வாக்களித்தனர். அன்றைய மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 489; இன்றைய எண்ணிக்கை 543. வாக்காளர்களின் இன்றைய எண்ணிக்கை 90 கோடி. சராசரியாக 70% வாக்களித்தால் அது சுமார் 60 கோடி பேர் வாக்குகளாக இருக்கும்.

முன்பு கட்சியின் சின்னம் வாரியாக வாக்குகளைப் போட்டு, அவற்றை எண்ணி வந்தோம். இவ்வாறு பிரிப்பதற்கு, பிறகு எண்ணுவதற்கு காலதாமமாவதைத் தவிர்க்க முடியவில்லை. இப்போது வாக்களிப்பதற்கே ஓர் இயந்திரத்தை உருவாக்கியுள்ளோம்.

முதல் முதலாக 1982-ல் நடந்த இடைத்தேர்தலில் தான் வாக்கு இயந்திரம் சோதனை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டது. நமது நாட்டில் 22 லட்சம் மின்னணு வாக்கு இயந்திரங்கள் தற்போது உள்ளன; வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை 10 லட்சம்தான். ஆனால் 17 லட்சத்து 30 ஆயிரம் வாக்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 10 லட்சம் வாக்குச் சாவடிகளுக்கு 17 லட்சத்து 30ஆயிரம் மின்னணு வாக்கு இயந்திரங்கள் எதற்காக என்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை எதிர்ப்பவர்கள் கேட்கிறார்கள்.

வாக்கு இயந்திரங்களில் ஏதேனும் கோளாறு ஏற்படுமாயின், மாற்று இயந்திரங்களாக உபயோகப்படுத்துவதற்காகத்தான் அதிக எண்ணிக்கையில் இந்த இயந்திரங்களை வைத்திருப்பதாகத் தேர்தல் ஆணையம் கூறுகிறது.

மின்னணு வாக்குப்பதிவு வேண்டாம் என்பவர்கள், மின்னணு வாக்கு எந்திரங்களில் ரகசியமாக பதிவுகளை முன்கூட்டியே செய்து வைத்துவிடலாம். அந்த மோசடியை யாராலும் கண்டுபிடிக்க முடியாது என்கின்றனர். வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு தொடங்கியத்திலிருந்து, முதல் இரண்டு மணி நேரத்திற்கு மட்டும் மின்னணு எந்திரங்கள் சரியாகச் செயல்படும்படி வைத்துக்கொள்ள தொழில்நுட்பங்கள் உள்ளன. அதன் பிறகு இயந்திரத்தின் எந்தப் பொத்தானை அழுத்தினாலும், ஒரே கட்சியின் சின்னத்தில் மட்டுமே பதிவாகும்படியும் செய்துகொள்ள முடியுமாம். மின்னணு இயந்திரத்தில் சதி செய்து பொய்யான வெற்றியைக் காட்ட முடியும் என்பதால், இயந்திரத்திற்கு மாற்றாக முன்பிருந்த வாக்குச்சீட்டு முறைக்கே திரும்பிவிடலாம் என்கின்றனர் சிலர்.

நமது நாட்டில் 20 வருடங்களாக மின்னணு இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நமது தேவைக்கு மட்டுமல்ல, பிற நாடுகளும் இந்திய மின்னணு வாக்கு இயந்திரங்களை வாங்கிச் சென்று அங்கு நடக்கும் தேர்தல்களில் பயன்படுத்தி வருகின்றன. நமது நாட்டில் இயந்திரத்தை நம்பாதவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நமது இயந்திரங்கள் தில்லுமுல்லு செய்வதற்கு வசதியாக உருவாக்கடவில்லை. அப்படி செய்யப்பட்டிருந்தால், நாம் அவற்றை ஏற்றுமதி செய்துள்ள நாடுகள் நமக்குக் கண்டனம் தெரிவித்திருக்குமே.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், ஒரு நவீன அறிவியல் கண்டுபிடிப்பு. இப்போது செயற்கை நுண்ணறிவு அறிமுகமாகியுள்ளது போன்றுதான் அன்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம். அப்போது தேர்தலில் வாக்குச்சீட்டு முறை பின்பற்றப்பட்டு வந்தது. அந்நிலையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை பெங்களூரிலுள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனமும், ஹைதராபாத்திலுள்ள எலக்ட்ரானிக் கார்ப்பரேஷனும் இணைந்து உருவாக்கின. இவை இரண்டும் இந்திய அரசு நிறுவனங்கள்.

1989-ல் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் இந்த மின்னணு இயந்திரத்தை முதலில் உருவாக்கி, அரசு கண்காட்சிகளில் வைத்தது. அப்போது பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றிவந்த தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளரான சுஜாதா (எஸ்.ரங்கராஜன்) குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

இவ்வாறு, அறிவியல் ரீதியாக சோதிக்கப்பட்ட பின்னர் தான் இந்த இயந்திரங்கள் வடிவமைக்கப்பட்டனவே தவிர, தேர்தலில் மோசடி செய்வதற்காக அல்ல என்பதை இந்த நடைமுறையை எதிர்ப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏதேனும் குறைபாடு இருந்தால், அக்குறைபாட்டைத்தான் சரிசெய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்க வேண்டுமே தவிர, மின்னணு இயந்திரத்தையே தடை செய்யக் கோருவது நியாயமாகுமா? மின்னணு வாக்கு இயந்திரத்தில் மோசடி செய்துவிடலாம் என்பது, அறுவை சிகிச்சை அரங்கில் உபயோகப்படுத்துகிற மருத்துவக்கத்தியால் ஒருவரைக் கொன்றுவிடவும் முடியம் என்பது போல் இருக்கிறது.






# 16[வது] செயற்குழு கூட்டம்

## சிட்கான் 2024 சேர்மன் தேர்வு

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 16வது செயற்குழு கூட்டம் கடந்த 18.02.2024 அன்று காலை 11 மணி அளவில் பெருங்குடியில் அமைந்துள்ள ஈஸ்வரி மகாலில் நடைபெற்றது. சேம்பர் குழுவினர் பலர் கலந்துகொண்ட இந்த கூட்டத்தில், ஸௌராஷ்ட்ரா தொழில் வர்த்தக மாநாடு - சிட்கான் 2024-ன் சேர்மன்-ஆக சேம்பர் துணைத்தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்களை தேர்வு செய்ய சேம்பர் முன்னாள் தலைவர் திரு. E.R. குமரேசன் அவர்கள் அறிவிக்க, சேம்பர் செயற்குழுவினர் அனைவரின் ஒருமித்த ஒப்புதலுடன் தேர்வு செய்யப்பட்டார். மாநாடு சிறக்க அனைவரும் வாழ்த்து தெரிவித்தனர். துணைத் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தனது ஏற்புரையை வழங்கினார். அவரது உரையில், அடுத்த ஆறு மாதத்திற்கு, நமது சேம்பர் செயற்குழுவினர் அனைவரும் "ஹுடினிம், பிசினிம், ஹோங்கும் சிட்கான் 2024" நினைவுடன் செயல்பட வேண்டும் என்று கூறியது அனைவரையும் உற்சாகத்தில் ஆழ்த்தியது. இந்த சிட்கான் மாநாட்டிற்கு வித்திட்ட சிட்கான் தந்தை திரு. C.K. சேகர் மற்றும் முன்னாள் சேர்மன்கள் அனைவரையும் நினைவுகூர்ந்தார். மாநாடு சிறக்க அங்கத்தினர்கள் ஆதரவு பெருக செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் முனைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அவோ! மிளோ!! ஹொடோ!!!
SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
2024






**Photos from Left to Right :**
Jt. Secretary **Mr. V.V. Ramlakshmanji,** Bulletin Member **Mr. K.B. Sivaprakash Babu,** Bulletin Chairman **Mr. S.M. Karthi Kumaran**, Guest **Mrs. Poornima Venkatesh**, PR **Mr. T.N. Suriyaprakash** & Bulletin Member **Mr. T.K. Yageswaran.**

லாப் ஸமாச்சார்-ன் பிப்ரவரி 2024 மாத இதழ் மதுரை திருநகர் சீதா லட்சுமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி தாளாளர் திருமதி. **பூர்ணிமா வெங்கடேஷ்** அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது.
மார்ச் 8 மகளிர் தினத்தைக் கருதி பெண் முன்னோடியாகத் திகழும் இவரை நமது குழுவினர் சந்தித்து லாப் ஸமாச்சார் இதழை வெளியீடு செய்தது. மகளிர் தினத்தைக் கருதி இதழ் வெளியீடு செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிக்குப் இதழ் குழுவினரை பாராட்டியும், தம்மை தேர்வு செய்தமைக்கு தமது மகிழ்ச்சியையும் தெரிவித்தார். இந்த சந்திப்பிற்கு உதவிய ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் முன்னாள் தலைவர் திரு. **எம்.கே. கலாதர் பாபு** அவர்களுக்கு இதழ் குழு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.


நூறுண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145, East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633
SRB 100 YEARS
SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702
SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO, 43035.
Ph : +1 952 290 6405
SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247
EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300
KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000
SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500
SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூளா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952
S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL

# Timely payment to MSMEs rule to be enforced from April 1: FINMIN OFFICIALS

## “Any change to it can now be brought in the next Union Budget in July. No change is feasible before that as it has to be approved by the Parliament."

The government will implement a rule in FY25 requiring payments to micro, small and medium enterprises (MSMEs) to be made within 45 days, failing which companies will have to pay tax on the amount due.

Any change to the rule is possible only in the Union Budget in July, two senior finance ministry officials said. The government is not looking at deferring the rule by one year, as sought by traders, they said.

“According to the Finance Act 2023, companies need to make payments to the MSME sector within 45 days, which is slated to come into effect from April 1, 2024, else the companies cannot claim deductions on it,” a senior finance ministry official told Moneycontrol.

The Finance Act, 2023, introduced Section 43B (h) in the Income Tax Act to ensure timely payments are made to MSMEs and to maintain uninterrupted cash flow. If companies fail to make payments within 45 days, the amount will be added to their profit on which tax will have to be paid.

Parliament has already approved the amendment. The new rule implies that an employer, including a company, can claim a deduction for tax, duty, cess, or fee payable to the government only when it is actually paid, regardless of when it is accrued or incurred.

"The provision ensures that businesses fulfil their tax obligations promptly, rather than defer payments indefinitely for tax benefits," the second finance ministry official told Moneycontrol.

### No change possible

Any change to the rule can be made only in the next budget in July, the official said, adding that no change is possible before that because it has to be approved by parliament.

"Even an ordinance route is not feasible as parliament will not be in session to approve it till July,” the official added.

The Confederation of All India Traders (CAIT) had sought postponement of the rule by a year, citing lack of clarity. CAIT secretary general Praveen Khandelwal said there is a need for greater awareness among traders nationwide about this provision.

MSMEs face mounting challenges due to delayed payments from public and private entities. Small businesses often operate on tight margins and payment delays disrupt their cash flow and hinder their operational capabilities.

From manufacturers to service providers, the ripple effects of delayed payments are felt throughout the MSME ecosystem. The income tax amendment aims at addressing the issue.

As per the Micro, Small and Medium Enterprises Development (MSMED) Act, 2006, the buyer is required to make payment to the MSME supplier within 45 days of the acceptance of goods or services rendered. Finance minister Nirmala Sitharaman has raised the issue several times after the pandemic and has asked businesses to make timely payments.

“It’s a good thing - extra teeth given by the new rule is good. This should be implemented stringently. There may be some hurt, but awareness was there. There could be loss of business. The new rule should continue and be enforced,” Ashok Saigal, co-chairman of the Confederation of Indian Industry MSME Council, told Moneycontrol.

He said the issue may be more of access to finance for buyers or a finance credit gap.

“It will be the cost of tax versus the cost of additional borrowing. If the buyer has been operating and has good credibility, it should not be difficult for him to get the finance. Businesses should find a way to get finance within 45 days to make payments to MSMEs.” Saigal said.

Additionally, the government has implemented measures to ensure compliance with these payment terms, such as the Trade Receivables Discounting System (TReDS), which helps MSMEs receive payments promptly by facilitating the discounting of their invoices.

The TReDS platform enables discounting of invoices/bills of exchange of MSME sellers against large companies, including government departments and public sector undertakings, through an auction mechanism to ensure prompt receivables at competitive market rates.



### சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்காக

# மதுரையில் உரையாற்றிய பாரதப் பிரதமர்



மதுரையில் 27.02.2024 அன்று நடைபெற்ற வாகனத் தொழிலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்கான "எதிர்காலத்தை உருவாக்குதல் – டிஜிட்டல் இயக்கம்" என்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் பங்கேற்று, வாகனத் துறையில் உள்ள ஆயிரக்கணக்கான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர் மத்தியில் உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7 சதவீதம் மோட்டார் வாகனத் தொழிலிலிருந்து வருகிறது என்றும், இது நாட்டின் தற்சார்பில் முக்கிய அங்கமாக உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். உற்பத்தி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதில் மோட்டார் வாகனத் துறையின் பங்கையும் பிரதமர் பாராட்டினார்.

